# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி
## (திருத்தம்)

**2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2014, மாச்சு மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2014, மாச்சு மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ *294 ஆம் சட்டமூலம்* ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 008068 -350 (2014/03)

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" என்று குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) நிதிச் சேவைகள் வழங்கல் தொடர்பில் செலுத்தப்படவேண்டிய வரியைக் கணிப்பிடுவதன் அடிப்படையைத் தீர்மானிப்பதும் மற்றும் நிதிச் சேவைகள் வழங்கலுக்கு வழங்கப்பட்ட விதிவிலக்கை அகற்றுவதுமாகும் ; அத்துடன்

(ஆ) வரி செலுத்தும் பொறுப்பிலிருந்து சில பொருட்களுக்கு விதிவிலக்கு அளித்தலாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணையைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அவ்வட்டவணையின் சட்டப்பயனானது கூடுதலான பொருட்களுக்கு விதிவிலக்கை விரிவாக்குதலாகும்.

**வாசகம் 4 :** 2014 சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதி வரையிலான காலப்பகுதியின்போது வரியைச் சேகரிப்பது தொடர்பில் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட எல்லா செயல்களையும் வலிதுடையதாக ஆக்குதலாகும்.

ச.வ.ஓ. 6/2014

## 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

***1***. இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், 2014, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*சுருக்கப்பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்..*

***2***. (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2013 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, சட்டத்தினால், கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அதன் (iii) ஆம் பந்தியில் ''பொருளாகும்'' என்னும் சொல்லுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

''பொருளாகும் :

ஆயின், வங்கித்தொழிலை அல்லது நிதியியல் தொழிலைக் கொண்டுநடாத்தும் எவரேனும் ஆளினால் இலங்கையிலுள்ள ஏதேனும் நிதிச் சேவையின் வழங்கலிலிருந்தான பொறுப்பாகக்கூடிய மொத்த வரவு, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டிற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் நிதிச் சேவையின் வழங்கலின்மீது சேர் பெறுமதி வரியைச் செலுத்துவதற்காக 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் 25இ என்னும் பிரிவின் (4) ஆம்

2-PL 008068 -225 (2014/03)

உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஏற்றிக்கூறப் படற்பாலதான முறையை ஏற்புடையதாக்குகின்ற நோக்கத்திற்காகக் கணக்கிடப்பட்டதும், அத்தகைய நிதிச்சேவைக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதாகவுள்ளது மான பெறுமதி சேர்ப்பாக இருத்தல் வேண்டும் :

ஆயின், மேலும் அத்தகைய நிதிச் சேவைக்கான பெறுமதி சேர்ப்பைக் கணிப்பதில், ஒவ்வொரு இயைபான காலாண்டிற்குமான இலாபங்களின் தொகை செம்மையாக நிச்சயிக்கப்பட முடியாதவிடத்து, அத்தகைய தொகை, கிடைக்கக்கூடிய தகவலின் அடிப்படையில் மதிப்பிடப்படலாம். மதிப்பிடப்பட்ட தொகை வருடாந்த அடிப்படையில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக்கூற்றுடன் உண்மைத் தொகை பிரதிபலிக்கப்படும் வண்ணம் சீர்செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய சீராக்கம் இயைபான கணக் கீட்டுக் காலப்பகுதி முடிவடையும் தேதியின் பின்னர் ஆறு மாதங்களினுள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) (iv) ஆம் பந்தியில்

(i) அதன் (2) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியினை இடுவதன்மூலமும் :-

"(2) (அ) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சீனி, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம், கருவாடு, பால்மா அல்லது மிளகாய் என்னும் அத்தகைய பொருள், அத்தகைய பொருளின் இறக்குமதியாளரினால் 2013 திசெம்பர் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் விற்பனை செய்யப்படுகின்றவிடத்து ; அல்லது

(ஆ) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டிற்கு அமைந்ததான ஏதேனும் பொருள், அத்தகைய பொருள் விற்பனைக்காக இசைவாக்குவதற்காக தவிர ஏதேனும் செய்முறைப்படுத்தலின்றி அத்தகைய பொருளின் இறக்குமதியாளரால் 2014 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் விற்பனை செய்யப்படுகின்றவிடத்து;'';

(ii) அப்பந்தியின் (7) ஆம் உட்பந்தியில் ''இறப்பர் தகடு) ; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இறப்பர் தகடு);'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(iii) அப்பந்தியின் (8) ஆம் பந்தியில் ''மண்ணெண்ணெய்.'' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''மண்ணெண்ணெய் ;'' என்னும் சொல்லை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(iv) அப்பந்தியின் (8) ஆம் உட்பந்தியினை உடனடுத்துப் பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

''(9) வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு செய்வதற்காக தீர்வையற்ற கடைகளில் செய்யப்படும் ஏதேனும் பொருளின் சில்லறை விற்பனை ; அத்துடன்

(10) எல்பி வாயுவின் விநியோகம்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணையினைத் திருத்துதல்.

**3**. 2013 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச், சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானமுதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணையானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.:-

(1) அவ்வட்டவணையின் I ஆம் பாகத்தில் :-

(அ) அதன் (xiii) ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும்:-

"(xiii) சுங்கநோக்கங்களுக்காக இசைவாக்கப் பட்டவியாபாரப் பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின் கீழ் இனங் காணப்பட்டஔடதப் பொருட்கள்;";

(ஆ) அதன் (xix) ஆம் விடயத்திற்குப் பதிலாக பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும்:-

"(xix) விற்பனையின்போது உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட டிராக்டர்கள்.".

(இ) (XLIV) என்னும் விடயத்தில் "ஏதேனும் பொருள்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் பொருள்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) (XLV) என்னும் விடயத்தினை "அல்லது சாதனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது சாதனம் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(உ) (XLV) என்னும் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதியவிடயத்தினை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(XLVI) 2014 ஆம் ஆண்டுசனவரி1 ஆந் தேதி யிலிருந்துதொடங்கும் மூன்று ஆண்டு காலப்பகுதி ஒன்றுக்கு உற்பத்தியாள ரால் விற்பனையின்போது உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய்;" அத்துடன்;

*(2)* அட்டவணையின் பாகம் II இல்,

(அ) அதன் (i) ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும்:-

"(1) 2013 ஆம் ஆண்டுடிசம்பர் 31 ஆந் தேதி யன்றுஅல்லதுஅதற்குமுன்னர் முடிவுற்ற ஏதேனும் காலப்பகுதிக்கான வங்கித் தொழில் அல்லது நிதியியல் தொழில் ;"

(ஆ) அதன் (vi) ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும் :-

"(vi) ஏதேனும் அசைவுள்ளஆதனம் தொடர்பில் நிதி குத்தகை வசதிகளை வழங்குதல்;";

(இ) அதன் (xxvi) விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும் :-

"(xxvi) சர்வதேசப் போக்குவரத்துத் தொடர்பில் ஏதேனும் துறைமுகத்திற்கு அல்லது துறை முகத்திலுள்ள அல்லது விமான நிலையத் திற்கு அல்லது விமான நிலையத்தினுள் வழங்கப்பட்ட சேவைகள்."

(ஈ) (xxxv) ஆம் விடயத்தில் "ஏதேனும் சேவை, அத் துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதே னும் சேவை;"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(உ) (xxxvi) ஆம் விடயத்தில் "ஏதேனும் சேவை.". என் னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் சேவை ; அத்துடன் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(ஊ) (xxxvi) ஆம் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தினை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(xxxvii) வெளிநாட்டு நாணயங்களில் கொடுப் பனவைச் செய்வதற்காக உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் நோக்கத்திற்கென

விதித்துரைக்கப்பட்ட சர்வதேச வலைப் பின்னலில் உள்ள ஏதேனும் நிறுவனத் தின் ஏதேனும் அமைவிடம் மாற்றப்பட்ட சர்வதேச தலைமையகம் அல்லது பிராந்திய தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்ட சேவைகள்.".

வலிதாக்குதல்.

***4***. விடயத்திற்கேற்ப உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதி முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம், 5 ஆம் பிரிவின் ஏற்பாடு களின்கீழ் 2014 சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது எந்த ஆளுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகின்றதோ அந்தஆளொருவரிடமிருந்து இச்சட்டத்தின் ஏற்பாடுகளை கருத்திற்கொண்டு கணிப்பிடப்பட்ட வரியைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப்பானது எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லு படியானதாக செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், இப்பிரிவின் மேற்சொல்லப்பட்டஏற்பாடுகள் மேற்சொல்லப்பட்ட காலப்பகுதியின்போது சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரிதொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப பட்ட ஏதேனும் தீர்மானம் அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்கும் வழக்கு நட வடிக்கையைப் பாதித்தலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதே னும் ஒவ்வாமைஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*